செ.வெ.எண்: 885

நாள்: 27.9.2008

# நாளிதழ் செய்தி

## சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் தொழில் சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு 2007–08 ஆண்டிற்கான விருது

தனியார் / பொதுத்துறை / கூட்டுத் துறை நிறுவனங்களைச் சார்ந்த தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக (Corporate Social Responsibility) தமிழ்நாட்டில் பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் பாராட்டத்தக்க வகையில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007–08 முதல் ஆண்டுதோறும் சிறந்த ஐந்து நிறுவனங்களுக்கு வழங்கப்படும், என தமிழக அரசு அறிவித்துள்ளது. விருது பெறும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படும்.

### தகுதிகள்

- பங்கு நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் தனிநபர் நிறுவனங்கள், அரசு / அரசு சார்ந்த நிறுவனங்கள், தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களின் கூட்டமைப்புகள் இவ்விருதினைப் பெற விண்ணப்பிக்கலாம்.

- இந்நிறுவனங்கள் நேரடியாகவோ, தங்களின் அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தங்களது இதர முகமைகள் மூலமாகவோ செயலாற்றலாம்.

### பரிசீலனைக்கான கூறுகள்

- மேற்கண்ட நிறுவனங்களால் ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளே விருது வழங்குவதற்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படும். எனினும், நகரங்களில் குடிசைப் பகுதிகளில் பாராட்டத்தக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அத்தகைய பணிகளும் விருது பெற தகுதியானவையாக எடுத்துக் கொள்ளப்படும்.

- விவசாயம், கால்நடை, கல்வி, பொதுச் சுகாதாரம், குடிநீர், மழைநீர் சேகரிப்பு, மரபு சாரா எரிசக்தி, வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல், சுய உதவிக் குழுக்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாடு, பெண்கள், குழந்தைகள், இளைஞர் நலன், மரக்கன்றுகள் நடுதல் ஆகிய சேவைகளில் சிறப்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் விருதுக்கு பரிசீலிக்கப்படும். மேலும், பல்வேறு சமூக நல மேம்பாட்டுப் பணிகளும் விருது வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும். மதச் சார்புடைய பணிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

- 1.4.2002 முதல் 31.3.2007 வரை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட பணிகள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

எனவே, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் தங்கள் விண்ணப்பங்களை முழு விவரங்கள் அடங்கிய தகுந்த ஆவணங்களுடன் 31.10.2008க்குள் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15 அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம். தேவையான விவரங்களை அனுப்புவதற்கான விண்ணப்ப படிவம் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் www.tnrd.gov.in என்ற இணைய தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தமிழக அரசு அறிவித்துள்ள சிறப்பான இவ்விருதினைப் பெற தகுதியான தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் விண்ணப்பம் செய்ய முன் வரவேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9